முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.11.2024) முகாம் அலுவலகத்தில், நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா தலைமை நிருவாக அறங்காவலர் சையது முகமது காஜி ஹுசைன் சாஹிப் மற்றும் நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வில், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ். எம். நாசர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சா.விஜயராஜ் குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ரா.ரெட்டி, மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச். நஜிமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலை!

# கலைஞர் 100 வினாடி - வினா மாபெரும் இறுதிப் போட்டி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசு வழங்கி சிறப்புரை!

சென்னை, நவ.20-

திராவிட இயக்க வரலாறு, முத்தமிழறிஞர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கழக மகளிர் அணி சார்பில், கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் முன்னெடுப்பில் மாபெரும் அறிவு திருவிழாவாக கலைஞர் 100 வினாடி வினா போட்டிகள் 12 மண்டலங்களாக நடைபெற்று வந்தன.

கலைஞர் 100 வினாடி-வினா மாபெரும் இறுதிப் போட்டி 23.11.2024 - சனிக்கிழமை காலை 9 மணியளவில் சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசு வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இதில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் தொடக்கவுரையாற்றுகிறார். கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை கழக தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் தொகுத்து வழங்குகிறார். கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், காரல் மார்க்ஸ், சத்திரமுகி சத்யவாணி முத்து, வாசுகி ரமணன், காயத்ரி சீனிவாசன், குமரி விஜயகுமார், தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., பவானி ராஜேந்திரன், மலர் மரகதம், அங்கையற்கண்ணி, சத்யா பழனிகுமார், சேலம் சுஜாதா, ரேகா பிரியதர்ஷினி, விஜிலா சத்யானந்த், மாலதி நாகராஜ், ராணி ரவிச்சந்திரன், அமலு விஜயன் எம்.எல்.ஏ., மாலதி நாராயணசாமி, மோ. தேன்மொழி, உமா மகேஸ்வரி, ஜெசி பொன்ராணி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., அ.ரியா, யாழினி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

### நாகூர் தர்கா கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு

# 45 கிலோ சந்தனக் கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.20-**

**நாகூர் தர்கா கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு 45 கிலோ சந்தனக் கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு :-

நாகூர் தர்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரி திருவிழாவிற்கு, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு அரசு வனத்துறையில் இருப்பில் உள்ள சந்தனக்கட்டைகளை நாகூர் தர்காவிற்கு கட்டணமின்றி வழங்கி வருகின்றது.

அதன்படி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.11.2024) முகாம் அலுவலகத்தில், இந்த ஆண்டிற்கான நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா தலைமை நிருவாக அறங்காவலர் சையது முகமது காஜி ஹுசைன் சாஹிப் மற்றும் நாகூர் தர்கா ஆலோசனைக் குழுத் தலைவர் சையது முகமது கலீபா சாஹிப் ஆகியோரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சா.விஜயராஜ் குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ரா.ரெட்டி, மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச்.நஜிமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ‘கலைஞர் 100 வினாடி வினா’ இறுதிப்போட்டி: முதல்வர் பரிசு வழங்குகிறார்!

# கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணியினர் திரண்டு வாரீர்!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் – நாமக்கல் பா.இராணி வேண்டுகோள்!

*சென்னை, நவ.20-*

*கழக மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் பா.ராணி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :*

*கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் முன்னெடுப்பில் திமுக மகளிர் அணி சார்பில் திராவிட இயக்க வரலாறு, திமுகவின் வரலாறு, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் மாபெரும் அறிவுத் திருவிழா கலைஞர் 100 வினாடி வினா போட்டி 12 மண்டலங்களாக நடைபெற்றது.*

*வரும் நவம்பர் 22ஆம் தேதி அரையிறுதி போட்டி. 23 ஆம் தேதி மாபெரும் இறுதிப் போட்டி அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.*

*கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.*

*தொடக்க உரையை கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பனும் வரவேற்புரையை கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சனும், நன்றியுரையை கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.இராணியும் ஆற்றுகின்றனர்.*

*நிகழ்ச்சியை கோவி லெனின் தொகுத்து வழங்குகிறார்.*

*இதில் அமைச்சர் பெருமக்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். அனைவரும் வருகை தர அன்புடன் அழைக்கின்றோம்.*

*இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.*

சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று (19.11.2024) நடைபெற்ற தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் 2024 வழங்கும் விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் சுற்றுலாத்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் தொழில் நிறுவனங்கள், உணவகங்கள், டிராவல் நிறுவனங்கள், அரசுத்துறைகள் உள்ளிட்ட சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா விருதுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். பி. சந்தரமோகன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஜெயராமகிருஷ்ணன் மகள் மருத்துவர் ஐஸ்வர்யா – மருத்துவர் சூர்யா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திருப்பூர் தெற்கு மாவட்ட அவைத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ஜெயராமகிருஷ்ணன் மகள் மருத்துவர் ஜெ.ஐஸ்வர்யா – மருத்துவர் சி.சூர்யா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இணையரை வாழ்த்தினார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி.கே.எஸ்.மஸ்தான், திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.